திருவள்ளுவராண்டு 2054
2024 நவம்பர், திசம்பர், சனவரி – காலாண்டிதழ்
மலர்–7 இதழ்–23

# உலகத்தமிழ்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

E-ISSN : 2581 - 9712

வெளியீடு
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

# உலகத்தமிழ் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## ஆசிரியர் குழு

### தலைமை ஆசிரியர்


முனைவர் **அவ்வை அருள்**
இயக்குநர்(பொ),
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
தொலைபேசி: 0452-2530766
நிகரி: 0452-2530799
மின்னஞ்சல்: director@utsmdu.org


### ஆசிரியர் குழு (இந்தியா)


முனைவர் **வி.திருவள்ளுவன்**
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: tamilunivc@gmail.com

**திரு.கோபிநாத் ஸ்டாலின்**
இயக்குநர் (மு.கூ.பொ)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: iits@tn.nic.in

முனைவர் **கோ.பிலவேந்திரன்**
பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drarangapari@gmail.com

முனைவர் **வை.இராமராஜபாண்டியன்**
புலத்தலைவர், தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை,
தமிழ்நாடு
மின்னஞ்சல்: drramarajapandian@gmail.com

முனைவர் **தி.உமா**
பேராசிரியர், நவீன இந்திய மொழிகள் மற்றும்
இலக்கியவியல் துறை,
தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி-110007
மின்னஞ்சல்: dumadevi@gmail.du.ac.in / umadchitra@gmail.com


### ஆசிரியர் குழு (அயலகம்)


திரு **ம.ஜெயராமசர்மா**
விக்டோரியா இந்துக் கல்வி மையத்தின் ஆலோசகர்,
அக்கினிக்குஞ்சு மின்னிதழ் இலக்கிய ஆலோசகர்,
"தடாகம்" தமிழ் இலக்கிய வட்டத்தின் பண்பாட்டு
இலக்கிய ஆலோசகர், ஆசுதிரேலியா.
மின்னஞ்சல்: jeyaramiyer@yahoo.com.au

முனைவர் **சி.இளங்குமரன்**
விரிவுரையாளர், தமிழ்ப்பிரிவு,
தற்கால மொழிகள் துறை,
மொழிகள் மற்றும் தகவல் தொடர்பியல்புலம்,
சுல்தான் இட்ரிஸ் பல்கலைக்கழகம்,
தாஞ்சோங்மாலிம், பேராக், மலேசியா.
மின்னஞ்சல்: s.lingkumaran@gmail.com

முனைவர் **இர.பிரபாகரன்**
கணினித் தொழில்நுட்ப வல்லுநர்,
பல்வேறு தமிழ்ச்சங்கங்களில் பதவி வகித்தவர்,
அமெரிக்கா.
மின்னஞ்சல்: prabu0111@gmail.com

முனைவர் **வி.ஜீவகுமாரன்**
அரச நூலகத்தில் தமிழ்ப்பகுதியின் பொறுப்பாளர்,
ஆலோசகர், நகரசபையின் புவியியல் சார்ந்த
தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர், டென்மார்க்.
மின்னஞ்சல்: jeevakumaran5@gmail.com

முனைவர் **ஆ.ரா.சிவகுமாரன்**
இணைப்பேராசிரியர், தமிழ்மொழி பண்பாட்டுப் பிரிவு,
தேசியக் கல்விக் கழகம், நன்யாங் தொழில்நுட்பப்
பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.
மின்னஞ்சல்: sivakumaran.r@nie.edu.sg


## செய்தி ஆசிரியர்


முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை


## தொடர்புக்கு


0452 - 2530766 / 2530799
utsmdu2@gmail.com
Uts Mdu
@TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




## முகவரி


இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை,
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை - 625020

# உலகத்தமிழ்

## காலாண்டிதழ்

## உள்ளே


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக் |
|---|---|---|---|
| 1. | ஈழத்தில் கண்ணகை அம்மன் வழிபாடும் மன்பேராய நோக்கும் | - பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி | 04 |
| 2. | ஐங்குறுநூற்றில் உளவியல் | - முனைவர் ந. தமிழ்மொழி | 16 |
| 3. | செம்மொழி இலக்கியங்களில் அமைதியும் நல்லிணக்கமும் | - முனைவர் இரா.சிங்கராஜா | 27 |
| 4. | மலேசியத் தமிழ் நாவலின் கருப்பொருள் வகையாக்கமும் தமிழாசிரியர்களின் ஈடுபாடும் – ஓர் ஆய்வு | - சீனிவாசன் சந்திரன் | 34 |
| 5. | தமிழ்கூறும் 'மதுரைகள்' | - முனைவர் பி. ஆறுமுகம் | 39 |
| 6. | கம்பராமாயணத்தில் தானங்கள் | - முனைவர் க.மங்கையர்க்கரசி | 47 |
| 7. | அவ்வை நிர்மலாவின் 'மந்தாரை' கவிதைத் தொகுதிகளில் காணலாகும் இயற்கை சிந்தனைகள் | - வை.நித்தியா | 55 |
| 8. | ஒலி அடங்கிப் பேசும் அகப்பாத்திரங்கள் | - ச.கண்மணிகணேசன்(ஓய்வு) | 62 |
| 9. | கறுப்பர் விடுதலையில் : ஆளுமைகளும் அரசியல் இயக்கங்களும் | - ஊ. முத்துப்பாண்டி | 71 |
| 10. | கூத்தராற்றுப்படை குறிப்பிடும் நிகழ்த்து கலைஞர்களின் வாழ்வியலும் பண்பாடும் | - ச.வாசுதேவன் | 83 |
| 11. | சூழலியல் நோக்கில் நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடல்கள் | - வி.ஜெயபிரியா | 89 |
| 12. | சே.இராமானுஜம் நாடகங்களில் விளிம்புநிலை மக்கள் | - க.சிவஞானசம்மந்தம் | 95 |
| 13. | தமிழ் இலக்கியங்களில் பாண்டிய நாட்டுச் சித்திர மாடங்கள் | - முனைவர் கு.கனிமணி | 102 |
| 14. | திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கையாளும் எண்ணுப்பெயர்கள் | - திருமதி ஜே.எஸ். ஷர்மிளா | 107 |
| 15. | திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்கள் | - முனைவர் மு.ரா.மஜிதா பர்வின் | 116 |
| 16. | நைஜீரியர்களின் வருகையும் கலாச்சார நெருக்கடியும் - 'நைரா' நாவலை முன்வைத்து | - மு.காயத்ரி | 121 |
| 17. | ஃபெப்ரீசியஸின் தமிழ் இலக்கண எழுதியல் | - முனைவர் ச. முருகேசன் | 128 |

# கம்பராமாயணத்தில் தானங்கள்



**முனைவர் க.மங்கையர்க்கரசி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அகர்சந்த் மான்மல்ஜெயின் கல்லூரி - (சுழல் - II),
மீனம்பாக்கம், சென்னை.
மின்னஞ்சல் : gmangaichennai@gmail.com
https://orcid.org/0000-0002-0895-0460

## முன்னுரை

ஒருவருக்கு அவரின் நிலை அறிந்து கொடுப்பது தானமாகும். அன்னதானம், அடைக்கல தானம், மருத்துவ தானம், கோ தானம், யாத்ரா தானம், பூமி தானம், கன்னிகா தானம் ஆகிய தானங்கள் குறித்துக் கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சில தானங்கள் குறித்த கருத்துகளை ஆராய்வோம்.

## தானம் செய்வது ஏன்

தானம் செய்வது ஒருவரின் வாழ்க்கையை நல்வழி நோக்கிச் செல்வதைக் குறிக்கிறது. தானம் புகழுக்காகவோ, புண்ணியத்துக்காகவோ செய்யக்கூடாது. நம் வாழ்க்கையைச் செழுமையாக வைத்திருப்பவர்களுக்கும் இறைவனை எண்ணி, பிறருக்கு அவரின் நிலை அறிந்து தானம் செய்யும் உதவியே தானமாகும். பிறர் கோரிக் கொடுப்பது தர்மமாகும். பிறர் கேட்கும் முன் கொடுப்பது தானமாகும். நாம் செய்த தானம் நமக்கு மீண்டும் உரிய நேரத்தில் உதவி தரும்.

## தானம் என்ற சொல்

திருக்குறளில் இரண்டு குறள்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

"தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின்" (திருக்குறள் - 19)

மழை பெய்யாவிட்டால் இல்லறத்தான் செய்யும் தானமும், துறவறத்தார் செய்யும் தவமும் ஆகிய இவ்விரண்டு அறங்களும் இல்லாமல்போகும்.

“மனதோடு வாய்மை மொழியில் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை” (திருக்குறள் - 295)

ஒருவன் தன் மனத்தோடு பொருத்திய உண்மையைப் பேசக் கற்றுக் கொண்டால், அவன் தவமும், தானமும் ஒருங்கே செய்தவரைக் காட்டிலும், தலைசிறந்தவன் ஆவான்.

**சிலப்பதிகாரத்தில் தானம்**

குடும்பத்தில் எவரும் இல்லை என்ற நிலையில் துறவை மேற்கொள்ளும் ஒருவர், தன்னிடம் உள்ள செல்வங்களைத் தானமாகக் கொடுத்து விடுவர். பொருட்களைத் தானம் செய்த பிறகே, துறவை மேற்கொள்வர். கோவலன் இறந்த செய்தியை அறிந்த கோவலனின் தந்தையும், கண்ணகியின் தந்தையும் துறவினை மேற்கொள்ள எண்ணினர்.

“கோவலன் தாதைக் கொடுந்துயர் எய்தி
மாபெருந் தானமா? வான் பொருளீ தாங்கு”

(சிலப்பதிகாரம் - நீர்ப்படைக் காதை, 90-91)

என்றும்,

“அண்ணலம் பொருத்தவத்து ஆசீ வகர்முன்
புண்ணியத் தானம் புரிந்துறங் கொள்ளவும்”

(சிலப்பதிகாரம் - நீர்ப்படைக் காதை, 99-100)

மாதவியும், மணிமேகலையும் துறவு மேற்கொண்டபோது தானம் செய்தனர்.

“கோதை தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவும்”

(சிலப்பதிகாரம் - நீர்ப்படைக் காதை, 107-108)

**கம்பராமாயணத்தில் தானங்கள்**

கம்பராமாயணத்தில் தானங்கள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**தானம் செய்தல்**

இராவணனுக்கு ஆலோசனை வழங்கியும், எந்தப் பயனும் இல்லாததை உணர்ந்த இந்திரஜித், வானவர் தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்த போர்க் கருவிகளைக் கையாளும் வித்தைகளையும், பிறவற்றையும் தேர் மேல் எடுத்துக்கொண்டு விரும்பினவர்களுக்கெல்லாம் ‘யாத்திராத் தானம்’ செய்து விட்டு,

தன்னுடன் வீரர்கள் வரவேண்டாம், மன்னனைக் காத்திடுங்கள் என்று கூறி இராவணனைக் கடைக்கண்ணால் நோக்கி, இரு கண்களினின்றும் கண்ணீர் சிந்த, போர்க்களம் சென்றான்.

"கொடைத் தொழில் வேட்டோர்க்கெல்லாம் கொடுத்தனன் கொடியோன் தன்னைக்

கடைக்கணால் நோக்கி நோக்கி, இருகண் நீர் கலுழப் போனான்"

(இந்திரசித் வதைப் படலம் - 9212)

**இராமன் செய்த தானம்**

இராமன் தான் மேற்கொள்ள வேண்டிய அரசாட்சி என்னும் செல்வத்தை விலக்கிவிட்டு, காட்டுக்குச் செல்லும் நாளில் யாத்திராத் தானம் செய்தான். அப்போது தானம் பெறும் ஆசையோடு வந்த "திரிசடன்" எனும் வேதியனுக்குப் பசுக் கூட்டத்தைப் பரிசளித்த இராமன், வேதியனின் ஆசை எல்லையில்லாததாக இருந்ததைக் கண்டு புன்னகை செய்ததை, சீதை நினைத்து அழுதாள்.

"பரித்த செல்வம் ஒழியப் படரும் நாள்
அருத்தி வேதியற்கு ஆன் குலம் ஈந்து அவன்
கருத்தின் ஆசைக் கரை இன்மை கண்டு இறை
சிரித்த செய்கை நினைத்து அழும் செய்கையாள்" (காட்சிப் படலம் - 354)

**கோசலை செய்த தானம்**

இராமனுக்கு நாளை முடிசூட்ட இருக்கிறது என்பதை, தசரதன் தெரிவித்த செய்தியை அறிந்த கோசலை, மகிழ்ச்சியுடன் எல்லா உலகங்களையும் பெருமை மிகுந்த தன் வயிற்றிலே அடக்கிய திருமாலைத் தனது வயிற்றிலே அடக்கிய தவத்தை உடையவள், இப்போது என்னிடம் பிறந்த இராமனுக்கு அருள் செய்வது உன்னிடத்தில் உள்ளதாகும் என்று இறைவனை வேண்டிக் கொண்டாள். இவ்வாறு வணங்கித் திருமாலுக்குப் பொருந்திய நான்கு வேதங்கள் கூறும் வழிபாடுகளைச் செய்தாள். அதன் பின்னர் அங்கிருந்த சிறந்த தவசிகளுக்கெல்லாம் கன்றை உடைய பசுவின் கூட்டத்தைத் தானமாகத் தந்தாள்.

"நன்று இழைத்து அவண் நல்ல தவர்க்கு எலாம்
கன்றுடைப் பசுவின் கடல் நல்கினாள்" (மந்திரப் படலம் - 94)

**இராவணன் செய்த தானம்**

இராவணன் போர் செய்யச் சிறந்த தன்னுடைய தேரினை நூல் முறையாகிய விதிப்படி அர்ச்சித்து வழிபட்டு இத்துணையர் என்று அளவிட்டுச் சொல்ல முடியாத கணக்கில்லாத பார்ப்பனர் அனைவருக்கும் செய்தற்குரிய சடங்கின்படி, நல்ல நிதியாகிய அளக்க முடியாத பெரும் பொருளை, நினைப்பதற்கும் எட்டாத நிலையில் மிக்கதொரு பெரிய தானமாக உள்ளம் உவந்து அளித்தான்.

"வினையின் நல் நிதி முதலிய அளப்ப அரும் வெறுக்கை
நினையின் நீண்டது ஓர் பெருங் கொடை அருங்கடன் நேர்ந்தான்"

(இராவணன் தேர் ஏறு படலம் - 3605)

**தசரதன் செய்த தானம்**

புதல்வர்கள் பிறந்த செய்தியைக் கேட்ட மன்னன் தசரதன், இன்பம் மிக்க சரயு நதியில் நீராடினான். விதை நெல்லையும், இனிய செல்வத்தையும் மிகுதியாகத் தானம் செய்தான். பின்பு வெண்மையான மங்கலச் சங்குகள் முழங்க வசிஷ்ட முனிவரின் முனிவன் உடன் வர சென்று, அரசகுமாரன்களின் அழகிய முகத்தைக் கண்டான்.

"மா முனி தன்னொடு மன்னர் மன்னவன்
ஏமுறப் புனல் படீஇ வித்தொடு இன் பொருள்
தாம் உற வழங்கி வெண் சங்கம் ஆர்ப்புற
கோமகார் திருமுகம் குறுகி நோக்கினான்" (திரு அவதாரப் படலம் - 289)

**மகாபலி செய்த தானம்**

மகாபலிச் சக்கரவர்த்தி விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் கைப்பற்றிய பின்பு ஒரு பெரு வேள்வி செய்தான். அந்த வேள்வியில் பூமியையும், கொடுத்தற்குரிய பிற பொருள்கள் அனைத்தையும் பார்ப்பனர்களுக்குத் தானம் செய்ய முடிவு செய்தான். (வேள்விப் படலம் - 417)

**வேறுபாடு கருதாது தானம் வழங்கவேண்டும்**

தானம் வாங்க வந்திருப்பவன் திருமாலே என்று சுக்ராச்சாரியார் கூற, அதற்குப் பதில் அளித்த மாவலி எவரும் மதித்தது கூறிய அறநெறி உரைக்கும் சிறந்த நூல்களை அறிந்த சான்றோர் தானம் செய்ய முன்வந்து தாங்கள் கருதிய தானத்தை யாவரும் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறிச் செய்வார்களானால், தானம் பெற வந்தவர்கள் நம் நண்பர்கள், பகைவர்கள் என்று வேறுபடுத்திப் பேச மாட்டார்கள்.

அதனால் தானம் பெற இங்கு வந்தவர்களுள் இந்த வாமனனைப் போலச் சிறந்தவர்கள் யார் உள்ளார். ஒருவரும் இல்லை என்று கூறினார். நீ வெள்ளியாக அறியாமை உடையவனாக இருப்பதால், இவ்வாறு கூறினாய். உயர்ந்தவர்கள் எவர் வந்தாலும், எதைக் கேட்டாலும் இல்லை. எண்ணாமல் ஈவது அல்லாமல், அவர்களால் கொடுக்கக் கூடாதவை என்று விளக்கப்பட்டவை சில என்ன உண்டு? ஒன்றும் இல்லை. எதனினும் இனிய தனது உயிரை இரந்து பெற்றுக் கொள்வது தீயது, உயிரையும் ஈவதே சிறந்தது. என் தந்தை போன்றவனே, இறந்தவர்கள் அனைவரும் இறந்தவர்களாக கருதமாட்டார்கள். யாசிக்க நேர்ந்த போது உயிரை விடாமல் பிறரிடம் ஒன்றைப் பெறுவதற்காக நீட்டிய கையோடு யாசித்தவர்களே உண்மையில் இறந்தவர்கள் என்று சொல்லப்படுவார்கள். இறந்து விட்டவர்கள் என்றாலும் தானம் செய்தவர்கள் அல்லாமல் உலகில் நிலைத்திருப்பவர்கள் வேறு யாரு உள்ளனர்? எவரும் இல்லை. தீராத பழி வந்து சேரும்படி செய்தவர்களும் அவருக்குப் பகைவராக மாட்டார். அவர்களுக்கு உண்மையான பகைவர் யார் எனில், பிறருக்குத் தானம் கொடுப்பவர் முன்னே நின்று கொடுக்காதே! என்று கூறித் தடுப்பவர்களே கொடுப்பவர்களுக்குப் பகைவர்களாவர். அவ்வாறு தடுப்பவர்கள் தம்மைத்தானே கெடுத்துக் கொள்பவராவர். கொடுப்பதைத் தடுப்பது போல, ஒரு தீச் செயல் வேறில்லை என்றான் மாவலி.

### தானம் கொடுப்பவரைத் தடுக்கக்கூடாது

அறநூலின் கருத்துப்படி தம்மிடம் செல்வம் இருக்கும் பொழுதே தானம் செய்து, இம்மையில் புகழையும், மறுமையில் புண்ணியத்தையும் அடையும்படி முயற்சி செய்பவர்களுக்கு, உள்ளேயிருந்தே கெடுக்கும் கொடிய பகையாய் இருப்பவர். உலோகக் குணத்தை விட்டு விடாதே என்று கூறிக் கொடுப்பவரைத் தடுப்பவரே ஆவர் என்று கூறினார்.

### தடுப்பவர்க்கு என்ன நடக்கும்

நற்குணம் இல்லாத சுக்ராச்சாரியே, கொடுப்பதைத் தடுக்கின்ற கொடியவனே, ஒருவர் தம்மை யாசித்தவருக்கு ஒரு பொருளை எடுத்துக் கொடுப்பதற்கு முன்பே, அக்கொடையைத் தடை செய்வது, குருவும் அமைச்சருமான உனக்கு அழகாகுமா? இச்செயலால் உன் சுற்றத்தார் உடுக்க உடையும், உண்ண உணவும் இல்லாமல் செய்து விடுகின்றாய்.

"எடுத்து ஒருவர்க்கு ஈதலின் முன்னம்

தடுப்பது நினக்கு அழகிதோ தகவுஇல் வெள்ளி

கொடுப்பது விலக்கு கொடியோய் உனது சுற்றம்

உடுப்பதும், உண்பதும் இன்றி விடுகின்றாய்"(வேள்விப் படலம் - 431)

இத்தன்மையான சொற்கள் அனைத்தையும் சொல்லிய மாவலி, அமைச்சனான சுக்ராச்சாரியார், 'வந்திருக்கும் வாமனன் கொடியவன்' என்று கூறிய சொல்லைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. 'நீ கேட்ட மூன்று அடி நிலத்தை நீயே உன் காலால் அளந்து கொள்' என்று கூறி, நெடுமாலான அந்த வாமனனின் குறுகிய சிறிய கையில் தானம் செய்வதற்குரிய நீரை வார்த்தான்.

**இராமன் அளித்த கோ தானம்**

திருமணத்திற்காக இராமன் நீராடிக் கோலம் கொண்டான். காதுவரை சென்று மோதும் கயல் மீன் போன்ற கண்களை உடைய கன்னிப் பெண்களைப் பார்ப்பனர்களுக்கு வேத விதிகளின்படி கன்னிகாதானமாக இராமன் வழங்கினார். பின்பு குறைவில்லாத தவம் செய்த தன் குலத்து முன்னோர்கள் வழிவழியாகத் தொழும் முதன்மையான பேரொளிப் பிழம்பான அரங்கநாதனின் திருவடிகளை வணங்கினான். (கடிமணப் படலம் - 1155) திருமணத்திற்காக இராமன் அலங்காரம் முடிந்ததும் பதினாயிரம் பசுக்களையும் பசும்பொன்னையும், அளவற்ற நிலத்தையும், நவமணிகள் அனைத்தையும் நல்லொழுக்கம் உள்ளவர்களுக்குத் தானமாகக் கொடுத்தான். பின்பு 4 வேதங்களைச் செல்வமாகக் கொண்டு ஓதும் பார்ப்பனர்கள் வாழ்த்துகள் வழங்க, இராமன் வெளியே வந்து தேரிலே ஏறினான். (கடிமணப் படலம் - 1175)

**ஜனகன் - கன்னிகா தானம்**

சக்கரவர்த்தித் திருமகனான இராமன் முன்னே, ஜனகன் நின்று தாமரையில் வாழும் திருமகளும் பரம்பொருளான திருமாலும் போல, நீ என் சிறந்த மகளோடு சேர்ந்து வாழ்க என்று கூறி, இராமனது செந்தாமரை போன்ற பெரிய கையிலே குளிர்ந்த நல்ல நீரை வார்த்து, சீதையைக் கன்னிகா தானம் செய்தான்.

"கோமகன் முன் சனகன் குளிர் நல் நீர்

பூ மகளும் பொருளும் என நீ என்

மா மகள் தன்னொடும் மன்னுதி என்னா

தாமரை அன்னத் தடக் கையின் ஈந்தான்" (கடிமணப் படலம் - 1192)

**மக்கள் தரச் சொன்ன தானங்கள்**

இராமன் நாளை முடிசூட இருக்கிறான் என்பதை அறிந்த ஊர் மக்களுள் சிலர், இவை சந்தனக் கட்டைகள், குற்றமற்ற மாணிக்க மாலைகள், இங்கே இருப்பவை சிந்தூரத் திலகமிட்ட முகங்களை உடைய யானை வரிசைகள், வெற்றியுடைய குதிரைகள், பசிய பொன்னாகிய செல்வம் மகனே இவற்றை ஏழைகள் பெற்றுக் கொள்ளும்படி உன் கையால் கொடுத்தருள்க என்று கூறி இச்செல்வங்களை வரிசையாக வைப்பார்கள் சிலர். (கைகேயி சூழ்வினைப் படலம் - 274)

**அடைக்கலத் தானம்**

இராவணனால் துரத்தியடிக்கப்பட்டு, தன்னிடம் வந்த வீடணனுக்கும் இராமன் அடைக்கலம் அளித்தான். அந்த முடிவைக் குறித்துச் சுக்ரீவன், அனுமன், சாம்பவான், நீலன் ஆகியோரிடம் கேட்டு அவர்தம் மனநிலையை அறிந்து, பின் தன் நிலையை அவர்களுக்குப் புரியும்படி விளக்கிக் கூறிய பின்பே, அடைக்கலம் அளித்தான். (வீடணன் அடைக்கலப் படலம் - 422)

**மருத்துவத் தானம்**

ஒருமுறை இந்திரஜித் பிரமாஸ்த்திரத்தினாலும், ஒருமுறை இராவணனின் வேல் பட்டதாலும், இலட்சுமணன் மயங்கி விழுந்தான். சாம்பவன் வழிகாட்டுதலால் அனுமன் மேருமலை சென்று, மருத்துவமனையைத் தூக்கி வந்து, சிகிச்சை அளித்ததால் இலட்சுமணன் எழுந்தான்.(மருத்துமலைப் படலம் - 2747)

**முடிவுரை**

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களில் தானம் குறித்த தகவல்கள் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றுள் தானம் என்றால் என்ன, யாருக்கு எப்போது தானம் அளிக்கவேண்டும், அதன் பலன்கள் குறித்தும், அன்னதானம், அடைக்கலதானம், மருத்துவதானம், கன்னிகாதானம், கோ தானம், யாத்ரா தானம், பூமிதானம், மருத்துவதானம் ஆகிய தானங்கள் குறித்துக் கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. கருத்திருமன். பி,சி. கம்பர் கவியும் கருத்தும்,வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2018.
2. காசி. ஆ, கம்பரும்திருத்தக்கத்தேவரும், தமிழ்ச்சோலைப் பதிப்பகம், சென்னை, 2010.

3. காலமும், கணக்கும் நீத்த காரணம் கம்பன், கட்டுரைத் தொகுப்பு, (பதிப்பாளர்கள் பழ.பழனியப்பன், சொ.சேதுபதி) கபிலன் பதிப்பகம், புதுச்சேரி.

4. சக்தி நடராசன்.க, கம்பரின் கை வண்ணம், சரசுவதி பதிப்பகம், ஆர்க்காடு, 2017.

5. பழனிவேலு. தா, காலத்தை வென்ற கம்பன், பல்லவி பதிப்பகம், ஈரோடு. 2021.

6. பூவண்ணன், கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும், தொகுதி - 1,2,3,4,5,6,7,8. வர்த்தமானன் வெளியீடு, சென்னை, 2011.

# சங்க வாழ்த்து

பொன்னும் துகிரும் முத்தும் மணியும்
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங்கு உலகுவாழ் தமிழர்
தண்ணிய உறவால் தழைத்தனர்
உலகத் தமிழ்ச் சங்கம் உண்மை யானே...!

– உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

E-ISSN : 2581 - 9712